# ஈ.டி.1116 கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கோயமுத்தூர்

## வேலைவாய்ப்பு அறிவிப்பு

அறிவிப்பு எண்-0500/நிர்-1/MPCS Rec./2021 நாள்- 25.01.2021

கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட தகுதி வாய்ந்த பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க பணியாளர்களிடம் இருந்து கீழ்கண்ட பணியிடங்களுக்கு இவ்வொன்றியத்தால் பரிந்துரைக்கப்பட்ட வடிவில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**1. பணியிடங்களின் விபரம்-**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை செயற்பணியாளர் (தட்டச்சு) | ரூ.19,500-62,000/- | 1 | விண்ணப்ப படிவம் மற்றும் பணி குறித்த விபரங்களுக்கு www.aavinmilk.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்க. |
| 2 | டெக்னீசியன்(ஆய்வகம்) | ரூ.19,500-62,000/- | 5 | |

**2. விண்ணப்பக் கட்டணம் மற்றும் செயலாக்க கட்டணம்-**

OC/BC/MBC/DNC பிரிவு வகுப்புகளை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூ.250/- (திரும்ப செலுத்தாதது) செலுத்த வேண்டும். SC/SCA/ST பிரிவு வகுப்புகளை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூ.100/- (திரும்ப செலுத்தாதது) செலுத்த வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்குண்டான விபரங்கள் மற்றும் எழுத்து தேர்வு விபரங்கள் விண்ணப்ப படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. விண்ணப்பிக்கும் முறை-**

தற்போது கோயமுத்தூர் ஒன்றியத்தின் எல்லையில் கீழ் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மட்டுமே இப்பணிக்கு விண்ணப்பிக்க இயலும். விண்ணப்ப படிவங்கள் மற்றும் இதர விபரங்களான கல்வித்தகுதி, வயது மற்றும் தேர்ந்தெடுக்கும் முறை அனைத்தும் www.aavinmilk.com என்ற இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட முழு வடிவிலான விண்ணப்பங்கள் தகுந்த வரைவோலைகள் மற்றும் அனைத்து சான்றிதழ் நகல்களை இணைத்து “பொது மேலாளர், கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பச்சாபாளையம், காளம்பாளையம்(அஞ்சல்), கோவை-641 010” என்று குறிப்பிட்டு விரைவு அஞ்சலிலோ அல்லது பதிவு அஞ்சலிலோ விண்ணப்பிக்க வேண்டும்.

**4. விண்ணப்ப படிவம் வந்து சேர கடைசி நாள்-** 10.02.2021 மாலை 5.30 மணி வரை.

தேதி- 25.01.2021

இடம்- கோயமுத்தூர்

பொது மேலாளர்
கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
கோயமுத்தூர்